1978 செப்டம்பர் 13]

கள்ளக்குறிச்சியில் நவீன அரிசி ஆலை

*வினா எண் 176— திரு. துரை முத்துசாமி :— மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கத்திற்கு நவீன அரிசி ஆலை கட்ட ஆன செலவு எவ்வளவு?

(ஆ) இதற்கு தென்னாற்காடு கூட்டுறவு மத்திய வங்கி ஏதும் முன்பணம் வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில் அதில் எவ்வளவு தொகை திரும்பச் செலுத்தப்பட்டது?

(ஈ) கூட்டுறவுச் சங்கத்தால் கட்டப்படும் நவீன அரிசி ஆலைகளுக்கு அரசு மானியம் ஏதாவது வழங்கப்படுகிறதா?

(உ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ரூ. 17,53,655 ஆகும்.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(ஈ) & (உ) : கள்ளக்குறிச்சி அரிசி ஆலையைப் பொறுத்த மட்டில் அரசு மானியம் ஏதும் இல்லை. எனினும், ஆலையைப் பராமரிக்க அமர்த்தப்பட்ட சிப்பந்திகளுக்கான முதல் மூன்று ஆண்டுகளுக்கு மானியமாக ரூபாய் 76,784.50-ஐ அரசு அளித்தது.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கத்தின் முன்னாள் தலைவர்மீது ஊழல் சம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கம் தற்போது யாருடைய தலைமையில் இயங்குகிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வேதாரண்யம் தொகுதியில் இறைவைப் பாசனத் திட்டம்

*வினா எண் 177—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் தொகுதியில் இறைவை பாசனத் திட்டத்தின் கீழ் மனுக்கள் எத்தனை வந்து உள்ளன?

(ஆ) திட்டம் எந்த அளவில் உள்ளது?